ஜெ.கௌரீஸ்வரன் தலைமை! ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. - வ.பெ.சுரேஷ் முன்னிலை!

# 53 'அ' வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் பொதுக்கூட்டம் - நலஉதவிகள் வழங்கல்!

இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. சிறப்புரை! ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - கலாநிதி வீராசாமி எம்.பி. - அ.சுபேர்கான் பங்கேற்பு!

*சென்னை, டிச.15-* சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்கு பகுதி 53 'அ' வட்டக் கழகம் சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (16.12.2025-செவ்வாய்) மாலை 6.30 மணியளவில் இராம்தாஸ் நகர், மின்ட் ஐ.டி.ஐ. அருகில் நடைபெறுகிறது.

இப்பொதுக்கூட்டத்திற்கு வட்டக் கழகச் செயலாளர் ஜெ. கௌரீஸ்வரன் தலைமை வகிக்கிறார்.

ஐட்ரீம் இரா. மூர்த்தி எம்.எல்.ஏ. பகுதிச் செயலாளர்கள் வ.பெ. சுரேஷ், இரா. செந்தில்குமார் மற்றும் பா.வேளாங் கண்ணி, எம். எல்.ரவி, எஸ். புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலா லட்சு மணன், இரா. பாலன், எம்.கே. இஸ்மாயில், கு. ரமேஷ், எஸ். திருஞானம், வி.மலையம்மாள், இ. மதன், எஸ்.ரமேஷ், ஜி.எஸ்.முருகன், ஏ.அன்வர், த. ஜெயபால், பி.சேகர், கு. சுந்தர், லோ. மோகன், டி.ஜெயலட்சுமி, க. கலைச்செல்வன், ஜி. சதீஷ் குமார், என். கிருஷ்ணன், ஆர்.வி. கணேஷ், பி. கண்ணன், கே. கோவிந்தராஜ் ஆகி யோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இ. மதிவாணன், பி. ஆகி பிரகாஷ், ஆர். வாசு, இ.ரகு, கே.கோபி, சார்லஸ், க. ஜெயசீலன், எம். செந்தில்குமார், எஸ். ரமேஷ், எம். கிருஷ்ணன், ஜெ. குணாளன், பி. ரூபாவதி, எஸ். சங்கர், எஸ். அசோக், ஏ. சாந்தகுமார், எம். ஜானகிராமன், டி. தன்ராஜ், பி.சி. கோட்டி, கொரியர் எம்.முருகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ. பரந்தாமன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுகிறார்.

மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., தொகுதிப் பொறுப்பாளர் டாக்டர் அ.சுபேர்கான் ஆகியோர் நல உதவிகள் வழங்கு கின்றனர்.

இவ்விழாவில் தா. இளைய அருணா, ந. மனோகரன், பி.டி.பாண்டிசெல்வம், என். மருதுகணேஷ், மு. கோபி, எஸ்.ஆர். கமலக்கண்ணன், க.நாகம்மை, வி. தயாளன், நா. சண்முகம், கி. ராஜேந்திரன், வே. சிவக்குமார், ப. சோம சுந்தரமூர்த்தி, ரெயின்போ என். விஜயகுமார், ஆர்.வி.லட்சுமிவேலு, பா.சுரேகா, ஜெயாவினோ ஸ்ரீதர், லியோ டி.சுரேஷ், வெ.சு. சத்தியநாராயணன், பி. செந்தில்குமார், கார்த்தி செங்குட்டுவன், லயன் என். தீனதயாளன், லயோலா கே. மதன், ஏ. சாந்தகுமார், ஐ.ராஜேஷ், எம்.விஜய சண்முகம், பி.கோபி, எம். திருநாவுகரசு, எம்.ஜெய சீலன், ஜெ. தரணிதரன், இரா. ஸ்ரீதர், ஆர். பிருந்தா, ஆர். சரசா, நா. கஜேந்திரன், ஜே. கே.நாதன், ஆர்.இம்ரான் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

ஏ.சக்திவேல், ஏ. பாஸ்கர் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கின்றனர்.

---

பாக முகவர் என்.ராஜேஷ் தலைமை ! என்.மருதுகணேஷ் - இரா.லட்சுமணன் - ச.தமிழ்செல்வன் முன்னிலை!

# 42(அ) வட்டத்தில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" 180வது பாகத்தில் ஆலோசனைக் கூட்டம்!

## பி.டி.ஏ. – பி.ஓய்.ஏ. – பி.எல்.சி. பங்கேற்பு!

*சென்னை, டிச.15-* சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதி 42(அ) வட்டத்தில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" திட்டத்தின் கீழ் வாக்குச்சாவடி எண்180 ஆலோசனைக் கூட்டம் பாக முகவர் என். ராஜேஷ் தலைமையில் இந்த வாக்கு சாவடியை சேர்ந்த சட்டத்துறை மாநிலத் துணைச் செயலாளர் வழக்கறிஞர் என்.மருதுகணேஷ், பகுதிச் செயலாளர் இரா. லட்சுமணன், வட்டச்செயலாளர் ச.தமிழ்செல்வன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆர். டி.ராஜா, கே.பி.சதீஷ்குமார், ப.ஆ.சண்முகம், கே. மணி, ஜி.ஏ.சிவமணி, மற்றும் வாக்குச்சாவடியை சேர்ந்த பகுதி மகளிர் அணி துணைச் செயலாளர் ஆர். கிரிஜா, பிடிஏ நந்தினி, பிஒய்ஏ, மற்றும் பிஎல்சிக்கள் அதே வாக்குச்சாவடியில் உள்ள சமூக ஆர்வலர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் இந்த வாக்குச்சாவடியில் உள்ள மக்கள் பிரச்சனைகள், அரசின் நலத்திட்டங்கள் யார் யாருக்கு கிடைக்கவில்லை, கடந்த தேர்தலில் பெற்ற வாக்குகள் மற்றும் வருகிற தேர்தலில் ஒவ்வொரு பிஎல்சி க்கும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் ஆகியவை குறித்து வாதிக்கப்பட்டன.

அரசின் நலத்திட்டங்களை மக்களிடத்தில் கொண்டு சென்று சேர்த்து, வாக்காளர்களை வீடு வீடாக சென்று சந்தித்து , திண்ணைப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு கடந்த தேர்தலை விட இந்த வாக்குச்சாவடியில் கூடுதலாக 100 வாக்குகள் பெற திட்டமிடப்பட்டது.

---

பெ.கண்ணன் தலைமை! தா.இளையஅருணா- இரா.செந்தில்குமார் முன்னிலை!

# இராயபுரம் 51 (அ) வட்டத்தில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா- பொதுக்கூட்டம்!

வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி சிறப்புரை! ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.-முன்னணியினர் பங்கேற்பு!

*சென்னை,டிச.15,* சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்குப் பகுதி 51 (அ) வட்டக் கழகம் சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர்-துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தின விழா - மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (15.12.2025-திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு காளிங்கராயன் தெரு, அண்ணா திருமண மாளிகை அருகில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு வட்டச் செயலாளர் பெ.கண்ணன் தலைமை வகிக்கிறார். தலைமைச் செயற்குழு உறுப்பினரும் சென்னை மாநகராட்சி நகர அமைப்புக் குழுத் தலைவருமான தா.இளைய அருணா, இராயபுரம் கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார், மு. கோபி, வே.சிவக்குமார், நா.சண்முகம், வ.பெ.சுரேஷ், த.ஜெயபால், பி.சேகர், கு.சுந்தர், லோ.மோகன், பி.ஜெயலட்சுமி, எம்.கே. இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ். திருஞானம், இ.மதன், வி. மலையம்மாள், க.கலைச்செல்வன், ஜி.சதீஷ்கமார், ஆர்.வி. கணேஷ், என்.கிருஷ்ணன், கே.கோவிந்தராஜன், இரா.பாலன், எம்.ரவி, எஸ். புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலாலட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அத்தோ பி.முனுசாமி, வி.குமார், பி.வி.ஆறுமுகம், எஸ்.ஏ.ராஜா, இரா.மருது பாண்டியன், க.கோவிந்தசாமி, ஜெ.கே.நாதன், கே. பாரூக்பாஷா, எஸ்.ரவிகுமார், பி.ராணி, டி.தனபால், கே.ஐயப்பன், ஆர்.பன்னீர் செல்வம், வி.மணிகண்டன், என்.அப்துல்மாலிக், எம். வினோத்குமார், எஸ்.பொன்னாரசன், இரா.நரேஷ், என். சுனில்குமார், எம்.அருண்பிரபாகரன், எம்.செல்வம், ஆர். வினோத்குமார், எஸ். மோகன்ராஜ், எம்.ஹேமந்த் ராஜ், இ.ஆராக்கியராஜ், ஆர்.ஏகாம்பரம், ஆர்.முனுசாமி, புக்ஸ்டால் கண்ணன், பி.ஞானம், எஸ்.சாகுல்பாய், ஏ.விஜய், ஏ.நூர்தீன், எஸ். பிரபு டேவிட் ஜி.ஐயப்பன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இக் கூட்டத்தில் திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி சிறப்புரையாற்றுகிறார். நல உதவிகளை மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர், எம்.எல்.ஏ., வழங்குகிறார். இதில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டாக்டர் அ. சுபேர்கான், தலைமைக் கழகப் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசுகின்றனர்.

இதில் இரா.மதிவாணன், பி.டி.பாண்டிச்செல்வம், ந. மனோகரன், இரா.கருணாநிதி, இரா.நரேந்திரன், க. நாகம்மை, கி.ராஜேந்திரன், கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, லயோலா கே.மதன், பி. செந்தில்குமார், டி. சுரேஷ், லயன் எம்.தீனதயாளன், கார்த்திக்செங்குட்டுவன், லட்சுமிவேலு, கே. என்.பார்த்திபன், எஸ்.குமரன், ஜி.எஸ்.முருகன், எம். எம்.டி.சலாவுதீன், ஐ.சி.எப். பழனி, த.ரவி, ந.பாரி, எம்.என். வெங்கட், க.லட்சுமணன், ஆர்.டி.ஜெய்சங்கர், எம்.பாலா மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட துணைச் செயலாளர்கள் டி.சகாயம், ஏ. ரமேஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.77, புளியந்தோப்பு, பேசின் பாலம் சாலையில் உள்ள சுந்தரபுரம் மாநகராட்சி விளையாட்டுத் திடலில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 37.30 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் குத்துச்சண்டை ஆடுகளம் அமைக்கும் திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.



இராயபுரம் சட்டமனறத் தொகுதி 53வது வார்டு பகுதியில் கட்டப்பட்டுவரும் புதிய சமுதாய நலக் கூடத்தின் கட்டுமானப் பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு மேற்கொண்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் பா.வேளாங்கண்ணி,வட்டச்செயலாளர் கௌரீஸ்வரன், உள்பட அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

---

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

# சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் - பகுதிச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (15.12.2025 - திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில், சென்னை, ஓட்டேரி, எண்.7, செல்லப்பா தெரு என்ற முகவரியில் நடைபெறும் கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் **ஆ. இராசா எம்.பி,** சிறப்புரையாற்றுகின்றார்.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

# மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கீதா ஜீவன் அறிவிப்பு!



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பி.கீதாஜீவன் தலைமையில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கே.கவிதா தேவி மற்றும் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.ராம லெட்சுமி முன்னிலையில் நாளை (16.12.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 11.30 மணி அளவில், கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக மகளிர் மற்றும் மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

1) தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பிறந்தநாள் விழா.

2) வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு

3) கழக வளர்ச்சிப் பணி

**அமைச்சர் பி.கீதாஜீவன்**
செயலாளர் - தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

---

ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா சிறப்புரை! க.தனசேகரன் - கே.கண்ணன் - வி.உமாகாந்த் பங்கேற்பு!

# 137 'ஆ' வட்டத்தில் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி' கூட்டம்!

## வட்டச் செயலாளர் அ.கதிரேசன் அறிக்கை!

*சென்னை, டிச.15-* சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மக்கள் மற்றும் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி கலைஞர் நகர் தெற்கு பகுதி 137வது ஆ வட்டக் கழகத்தில் 153ஆவது பாக ஆலோசனைக் கூட்டமும் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி நிகழ்ச்சி அஞ்சுகம் தெருவில் பாக முகவர் எஸ்.சதீஷ் தலைமையில் வட்டச் கழக செயலாளர் அ. கதிரேசன் ஏற்பாட்டில் நடைபெற உள்ளது.

இன்று (15.12.2025 ) மாலை 7 மணி அளவில் நடைபெறும் இக்கூட்டத்தில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் 137-வது ஆ வட்டக் கழக மாமன்ற உறுப்பினரும் கணக்கு மண்டல குழு தலைவர் ஆன தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், பகுதி கழகச் செயலாளர் மாமன்ற உறுப்பினருமான கே.கண்ணன், விருகம்பாக்கம் தொகுதி பொறுப்பாளர் வி. உமாகாந்த் மற்றும் 137 வது ஆ வட்டக் கழகத்திற்கு உட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மகளிர்கள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அ.கதிரேசன் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டூர் கோபால்

### டிசம்பர் 15 (1978)



தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர், கழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.

தொழிலாளர்களின் நலன் காக்கும் பொருட்டு 'உழைப்பாளி' என்ற இதழைத் துவக்கி, அதன் ஆசிரியராகவும் பெரும் பணி ஆற்றினார்.

"இயக்கத்தோடு இணைந்து வளர்ந்த பகுத்தறிவுச் சிங்கம்! ஆயிரம் கொடுமைகள் இழைக்கப்பட்ட போதும் ஆடாது அசையாது இலட்சியம் காத்திட்ட பெருமகன்! நெருக்கடி காலத்தில் மிசாக் கைதியாக இருந்தபோது அவருக்கு கிடைத்த பரிசு நெஞ்சு வலி. அதுவே அவரை நம்மிடமிருந்து பறித்துக் கொண்டுவிட்டது. தொழிலாளர்களுக்காக வாதாடுகிற திறனும் – போராடுகிற துணிவும் நிறைந்த எனதருமை உடன்பிறப்பு" என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு.சீ.வெங்கடாசலம்

### டிசம்பர் 15 (2009)



தம் இளம் வயதிலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

சேலம் ஒன்றியக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

1971 முதல் 1976 வரை சேலம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும், சேலம் சொர்ணபுரி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

1975ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் தொண்டர் படைத் தலைவராகப் பணியாற்றியவர்.

விவசாயப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**